REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

பிச்சைக்காரர்களுக்கு வேலை தர சர்க்காரிடம் திட்டம் இல்லை!

"நாடு முழுவதும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை, வாழ்க்கைமுறைபற்றி ஒரு 'சர்வே' எடுக்கும் திட்டம் எதும் டில்லி சர்க்காரிடம் இல்லை" என்று உள்நாட்டு விவகார மந்திரி பி. என். தத்தார், மக்கள் சபையில் தெரிவித்தார்.

"சமுதாயத்திற்கு பெருங்கேடு விளைவிப்பவர்கள் என்ற முறையில், பிச்சைக்காரர்களுக்கு' ஏதேனும் வேலை செய்ய சர்க்கார் வாய்ப்புத் தேடித்தருமா?" என்று, உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, மேற்கண்டவாறு பதிலளித்த மந்திரி, 'இப்போது பிச்சைக்காரர் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்றும் சொல்லுவேன்' என்றும் குறிப்பிட்டாராம்.

மலர் 4] சென்னை: கார்த்திகை 13உ புதன் (28—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 14உ வியாழன் (29—11—56) [இதழ் 146

தென்பகுதி இரயில்வே

புறக்கணிக்கப்பட்டதே காரணம்?

'இரயில்வே போர்டு எவருக்கும் பயனில்லாதது'

'சோம்பிக்கிடக்கும் ஒரு நிறுவனம்'

மக்கள் சபை விவாதத்தில் வல்லத்தரசு பேச்சு

"இரயில்வே போர்டு உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும்; இது சோம்பிக் கிடக்கும் ஒரு நிறுவனம்; இந்த நாட்டில் எவருக்கும் ஒரு துளியும் பயன்படாத நிறுவனமாகும்.

"இரயில்வே போர்டு உறுப்பினரில் எவரேனும் இதுவரை, இரயில்வேக்களில் உள்ள பாலங்களைப் பார்த்து, அவற்றில் உள்ள குறைகளைக் கண்டறிந்து, கண்டறிந்த குறைகளை நீக்க முயற்சித்ததுண்டா?"

என்று, தோழர் எம். வல்லத்தரசு, அரியலூர் விபத்து பற்றி மக்கள் சபையில் விவாதத்தைத் துவக்கிவைத்துப் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், 'பிராந்திய இரயில்வே நிர்வாகம் திறமையற்றிருக்கிறது — ஒழுங்கற்றிருக்கிறது' என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார்.

அரியலூர் விபத்துபற்றி டெல்லி அரசியல் வட்டாரங்களில் கருத்துகள்

அரசியல் பற்றற்ற பிரயாணிகளே கூறுகின்றனர்!

மந்திரி பதில்

"இரயில்வே நிர்வாகத்தில் திறமைக் குறைவும் ஒழுக்கக் குறைவும் இருக்கிறது என்பதை ஒப்புகிறேன்.

"ஆனால், இதர இலாகாக்களை விட இரயில்வே இலாகா ஒன்றும் மோசமாயில்லை,"

என்று, இரயில்வே மந்திரி சாஸ்திரி கூறியிருக்கிறார்.

விவாதத்திற்குப் பதிலளித்த அவர், மேலும், 'இரயில்வே போர்டு இருக்க வேண்டும் என்பது பற்றி நான் ஒன்றும் பிரமாதமாகக் கவலைப்படவில்லை; சபையின் விருப்பத்திற்கொப்ப நான் நடந்து கொள்வேன்; ஆனால், நமது இரயில்வே போர்டு அமைப்பை, இங்கிலாந்து நாட்டவர் பின்பற்றி விரும்புகின்றனர் என்பதை மட்டும் கூறுவேன்' என்றும் கூறியிருக்கிறார்.

புதுடில்லி, நவ. 27—

தென்பகுதி இரயில்வே சரிவர டில்லியால் கவனிக்கப்பட்டிருக்குமானால்-புறக்கணிக்கப்படாமலிருந்திருக்குமானால், அரியலூர் இரயில்வே தவிர்க்கப்பட்டிருக்கமுடியும் என்ற கருத்து, தென்னாட்டிலிருந்து வடநாடு செல்லும் பிரயாணிகளிடையே சாதாரணமாக நிலவுகிறது.

'வடநாட்டில் ஏராளமான இரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்படுதல்போன்ற வேலைகள் பெருமளவில் நடைபெறுகின்றன; ஆனால் தென்னாட்டில், ஒரு இரயில் நிலையத்தில்கூட இதுபோன்ற வேலைகள் நடைபெறுவதாகக் காணோம்,' என்று நேற்றுத்தான் டில்லி வந்து சேர்ந்துள்ள ஒரு பிரயாணி கூறுகிறார் என்று சென்னை இதழ் ஒன்று கூறுகிறது.

அரசியல் அக்கரை இல்லாத சாதாரண பிரயாணிகள், 'தென்பகுதி இரயில்வே குறித்து நியாயமான அக்கரை காட்டப்பட்டிருந்தால் அரியலூர் விபத்து தவிர்க்கப்பட்டிருக்கமுடியும்,' என்றே கருதுகின்றனர்.

வடநாட்டில்கூட விபத்துக்கள் நடைபெறுகின்றன; என்றாலும்கூட, இந்த எண்ணம் பரவலாக இருக்கிறது.

மக்கள் சபை அரசியல் வட்டாரங்களில்கூட, இந்தக் கருத்து தலைதூக்கியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

'மேலும் 33 சிமெண்டு ஆலைகள் நிறுவப்படும்'

மக்கள்சபையில் தகவல்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள், சிமெண்டு உற்பத்தி, இலட்சிய அளவை அடைந்துவிடுமாம். ஆண்டுக்கு 160 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுமாம்!

'நாட்டின் பல்வேறு பகுதிகளில் புதிதாக 33 சிமெண்டு ஆலைகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது' என்று மக்கள் சபையில், கனரக தொழில் அமைச்சர் ஷா அறிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் பெரியம்மை அதிகரிப்பு

சென்னை சுகாதார இலாகாவின் டைரக்டர் விடுத்துள்ள அறிக்கையில், சென்னை மாநிலத்தில் பெரியம்மை வியாதி அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மாநிலம் முழுமையிலும் காலராவோ, 'பிளேக்'கோ இல்லையாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை எண் 11/56:

தேர்தல் நிதி திரட்டும் வாரம்

[டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரை]

★

கடமையைச் செய்ய கிளைக் கழகங்களுக்கு வேண்டுகோள்

நாடெங்கணும் அமைந்துள்ள தி. மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரையிலும் உள்ள ஒரு வார காலத்தைத் 'தேர்தல் நிதி திரட்டும் வாரமாக'க் கருதித் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

கிளைக் கழகங்களைச் சேர்ந்த முக்கிய நிருவாகிகளும், பிற முக்கிய தோழர்களும் கழகத் தோழர்களிடத்திலும் கழக ஆதரவாளர்களிடத்திலும் பொதுமக்களிடத்திலும் நேரிடையாக அணுகித், தி. மு. கழகத்தின் தூய நோக்கத்தையும் தேர்தல் நிதியின் அவசியத்தையும் எடுத்துக்கூறி நன்கொடை வாங்கும் பணிகளில் சிறப்பாக ஈடுபட வேண்டுகிறோம்.

அந்த ஒரு வார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடையாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

★

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

★

'அறிவகம்'
சென்னை-13
28—11—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் நிதி திரட்டுவதை பெரும் 'சோதனை'யாகக் கருதவேண்டும்

மகனுக்கு மணம் முடிக்க சிறுதொகை சேமிக்கும் தாய்போல......

கழகத்திடம் பாசம் கொண்டோர் பணம் தர வேண்டும்

நம்ப வைத்து மோசம் செய்யாதீர்

திராவிடர்களுக்கு அண்ணா வேண்டுகோள்

"தேர்தல் நிதி திரட்டுவதை கழகத் தோழர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள பெரியதொரு 'சோதனை'யாகக் கருதவேண்டும்.

"தாங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு அணாவையும் 'தேவைதானா இந்தச் செலவு? தேர்தல் நிதிக்கு இதனைத் தருவதைவிட, இந்தச் செலவு அவசியமானதா?' என்று எண்ணிப்பார்த்துச் செலவிட்டு, சிறுகச் சிறுக மிச்சப்படுத்தி அவ்வப்பொழுது தலைமை நிலையத்திற்கு அனுப்பித்தர வேண்டும். நாட்கள் வேகமாகச் சென்றுகொண்டிருக்கின்றன; தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

"தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப், போட்டியிடுகிறோம் என்றால், 'டிபாசிட்' தொகையாக நாம் கட்டவேண்டி வருவது மட்டும் சுமார் ரூ. 40,000 ஆகும். ஒரு தொகுதிக்கு தலைமைக் கழகம் ரூ 1,000 தருவதானாலும், ரூ. 1,50,000 வேண்டியிருக்கும். 'போஸ்டர்'கள் வெளியிடுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் தேவைப்படலாம்; இதை எல்லாம் கருத்தில் கொண்டுதான், நமது பொதுச்செயலாளர் 5 இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

'சேரிகளை ஒழிப்பேன்'

சென்னையின் புதிய மேயர் வாக்குறுதி அளிக்கிறார்

சென்னை, நவ. 28—

சென்னை நகரசபையின் புதிய மேயராக வழக்கறிஞர் கே. என் சீனிவாசன் அவர்களும், துணை மேயராக கே. ராமதாஸ் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தன் பதவி காலத்தில் சேரிகளை ஒழித்து மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதாகவும், வடசென்னைக்குப் பல வசதிகளை செய்து தருவதற்கு முயற்சிப்பதாகவும், மக்கள் வாழும் பகுதிகளில் கால்நடைகளை அப்புறப்படுத்துவதற்கு முயல்வதாகவும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குத் தொழில் வரியை ரத்து செய்யப் பாடுபடுவதாகவும் புதிய மேயர் கூறியுள்ளார்.

இதென்ன கூத்து!

நியூயார்க், நவ. 27—

தங்களுடைய நாட்டின் உள்நாட்டு விஷயங்களில் ஐ. நா. அடிக்கடி தலையிடுவதால், இனிப் பெயரளவில்தான் தென்னாப்பிரிக்கா ஐ. நா.-வில் அங்கம் வகிக்குமென்று தென்னாப்பிரிக்க அமைச்சர் லோ கூறியுள்ளார்.

நம் நாடு

சென்னை 28—11—'56 புதன்

அங்கேரியின் சோக முடிவு

அங்கேரி நாட்டில் எழுந்த 'மகத்தான மக்கள் எழுச்சியும்', அதை ஒடுக்க சோவியத் இராணுவம் அங்கு குறுக்கிட்ட அதிக்கிரமமும், இறுதியில் தனக்கு விருப்பமான ஒரு அமைச்சை உருவாக்குவதில் சோவியத் ருசியா பெற்ற வெற்றியும், அதுவரை சோவியத் ருசியா குறித்து உலக மக்கள் கொண்டிருந்த உயர்ந்த நினைப்பை உருக்குலைத்துவிட்டன. சோவியத் நாட்டு மக்களுக்கேகூட, இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளதுபோல் ஒரு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கி இருந்தாலும் இருக்கக் கூடும்.

அங்கேரி நாட்டில் ஏற்பட்ட 'மகத்தான மக்கள் எழுச்சி'யைத் தருணத்தில் ஒடுக்கி, தனக்கு விருப்பமான ஒரு அமைச்சை அந்த நாட்டில் உருவாக்க சோவியத் ருசியா தவறி இருக்குமானல், அங்கேரி நாட்டில் ஒரு முதலாளித்துவ அரசாங்கம் ஏற்பட்டுவிட்டிருக்கக் கூடும்; அதன் பலனாக மூன்ருவது உலகப் பெரும்போர் மூளுவதற்கும் வாய்ப்பாகி இருக்கக்கூடும் என்று, சோவியத் நாட்டின் இராணுவக் குறுக்கீட்டுக்கு நியாயம் காட்டப்பட்டது. அதுவுமன்றி, அங்கேரியில் சோவியத் 'ஆட்சியினர் நடந்துகொண்ட முறை, இருநாட்டு மக்களின் எதிர்கால நலனுக்கும் உலக அமைதிக்கும் இன்றியமையாதது என்றும் வாதிடப்பட்டது.

சோவியத் இராணுவ குறுக்கீட்டில் மறைந்து கிடக்கும் அடிப்படை பிரச்சினையை அடியோடு மூடி மறைத்துவிடும் கருத்துடன், விவாதத்திற்குரிய, முழுதும் வேருன புதிய பிரச்சினை ஒன்று கற்பிக்கப்பட்டிருக்கிறது என்ற மகத்தான உண்மைதான், அந்த வாதத்தில் அடங்கி இருக்கிறது. எனவே, அங்கேரியின் 'தேச சுதந்திரம்' சோவியத் செயலால் பறிக்கப்பட்டுள்ள சோகக்கதையான மூலப் பிரச்சினையை, உலக மக்கள் கண்களிலிருந்து மறைத்துவிடுவது இயலாததாகிவிட்டது.

அங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குறித்து இதுவரை விவாத அளவில் விரிவாகப் பேசப்பட்டுவந்த மற்ருெரு உண்மையும், அங்கேரியில் சோவியத் மேற்கொண்ட நடவடிக்கையால் தெளிவாகத் தெரிந்து விட்டது. அதாவது, அங்கேரி உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இதுவரை இருந்துவந்த—வருகிற அரசாங்கங்கள் அனைத்தும் சோவியத் ருசியாவின் கீழ்த்தரமான ஆதிக்கத்திற்கு அடங்கியுள்ள ஆட்சியமைப்புகளேயாகும் என்ற உண்மை அங்கேரி நெருக்கடியால் அம்பலமாகிவிட்டது. நிற்க,

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சோவியத் ருசியாவுக்கும் அரசியல் துறையில் இருந்துவரும் உறவுமுறை எத்தகையது என்பது அங்கேரியில் நடைபெற்ற சோகச் சம்பவங்கள் மூலம் விளக்கமாவதற்கு முன்பே, யூகோஸ்லாவியாவிற்கும் சோவியத் ருசியாவிற்கும் ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட உறவு முறிவு மூலம் தெளிவாகி இருக்கிறது. இருந்தாலும், அங்கேரிய நிகழ்ச்சி அக்கருத்தை மேலும் உறுதி செய்திருக்கிறது.

உலகில் உள்ள மற்ற நாடுகளைப்போன்றே, அங்கேரி நாடும் ஒரு 'சுதந்திர நாடு' என்று பறையடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

'சுதந்திர நாடு' என்ற கருத்தில்தான், ஐக்கிய நாடு சபையில் அங்கேரி நாடு அங்கம் பெற்று இருக்கிறது.

அங்கேரி, 'சுதந்திர நாடு' என்ற நிலையில்தான், மற்ற நாட்டுத் தூதுவர்கள் அங்கு இருந்துவரவும் மற்ற நாடுகளில் அந்த நாட்டுத் தூதுவர்கள் இருந்துவருவதுமான அந்தஸ்து இருக்கிறது.

ஒரு சுதந்திர நாட்டுக்கு உலகம் வழங்கக்கூடிய மதிப்புகள் அனைத்தையும் பெற்று அனுபவித்துவருகிற அங்கேரி, உண்மையிலேயே, குறிப்பிட்ட சொல்லுக்குள்ள பொருள்படி, ஒரு உண்மையான 'சுதந்திர நாடு'தானு என்ற கேள்வி, சோவியத் இராணுவக் குறுக்கீட்டிலிருந்து கிளம்பி இருக்கிறது. அதற்கு நேர்மையான பதில் கூறவேண்டியது அல்லது காண வேண்டியதுதான் முக்கியமானதாகும்.

உலகம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சுதந்திர நாட்டுக்குரிய இலட்சணம் அனைத்தும், அங்கேரி நாட்டுக்கு அமைந்திருக்கிறதா இல்லையா என்பதை ஆராயவேண்டும். அத்தகு ஆராய்ச்சியின் பயனுக அங்கேரியும் ஒரு சுதந்திர நாடுதான் என முடிவு கட்டப்படுமானல், அங்கு உள்நாட்டில் நடைபெற்ற 'மகத்தான மக்கள் எழுச்சி' அந்த நாட்டு ஆட்சியை மட்டுமே பொறுத்த விஷயம் என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். அத்துடன், அந்த உள்நாட்டு விவகாரத்தில், மற்ருெரு நாடு தலையிடுவது அறவே கூடாது—ஆகாது என்பதையும் ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடாது.

இது, சுதந்திர நாடுகள் அனைத்துக்கும் உள்ள பொது நியாயம். இப்பொது நியாயத்திற்குத் தம்மிச்சையாகக் கட்டுப்பட்டு நடந்துகொள்ள, உலகத்தில் உள்ள ஒவ்வொரு சுதந்திர நாடும்—சிறந்த இராணுவ பலம் கொண்டதாக இருந்தாலும், இல்லாமலிருந்தாலும் முன்வரவேண்டும். அதைத்தான் உலக அறநெறி எனக்கொள்ளப்படும்.

அங்கேரி விஷயத்தில் சோவியத் ருசியா நடந்துகொண்டது, மேலெடுத்துக்காட்டிய உலக அறநெறிக்கு மாறுபட்டுக் கிடப்பதேயாகும். அதையும் 'ஆக்கிரமிப்பு' என்றுதான் கூறவேண்டும். ஆனல், அதை சோவியத் வகை 'ஆக்கிரமிப்பு' எனப் பெயரிட்டுக் கூறுவதே முற்றும் பொருத்தமுடையதாகும்.

சோவியத் இராணுவக் குறுக்கீடு அங்கேரியில் ஏற்படாவிட்டால் மூன்ருவது உலகப்போர் வந்துவிட்டிருக்கும் — அங்கு 'பாசிஸ்ட்' ஆட்சி நிறுவப்பட்டிருக்கும்— மலர்ந்து மணம் வீசிவரும் புத்தம் புதிய சனநாயக ஆட்சி முறையின் சென்ற கால சாதனைகள் அனைத்தும் அழிக்கப்பட்டுப் போகும் — எனப் பலப்பல பேசுவது அனைத்தும், அங்கேரி மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்ட சோக வரலாற்றை, மூடி மறைப்பதற்குக் காதொடிந்த ஊசியளவும் பயன்படாது.

'புதிய சேரிகள் அகற்றப்படும்'

சர்க்கார் திட்டம் விளக்கம்

சென்னை, நவ 25—

மாநிலத்தில், சில குறிப்பிட்ட நகர்ப்புறப் பகுதிகளில் சேரி ஒழிப்பு, புனர் குடியமைப்புச் செலவிற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 7,35,00,000 ரூபாய் செலவிடுவதற்கு சர்க்கார் திட்டங்கள் வகுத்துள்ளனர்.

சேரிவாழ் மக்களை, தற்போது அவர்கள் வேலை செய்துவரும் தொழில்துறை இடங்களிலிருந்து வெளியேற்ருமல், ஆரோக்கியமாக உள்ள மாற்று இடங்களில் குடி அமைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு மேலும் பலர் நகர்ப் பகுதிகளுக்கு வந்து புதிய சேரிகள் ஏற்படுத்தக்கூடும்; ஆகவே, ஏற்படும் சேரிகளுக்கு மேற்படி வசதிகள் அளிக்கப்படமாட்டாது; சட்டப்படி அவர்கள் கண்டிப்பாய் வெளியேற்றப்படுவர்; இப்போதுள்ள சேரிகளுக்கு மட்டுமே இந்த வசதிகள் கிடைக்குமென்று சர்க்கார் அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்புக்குப் பிறகு தோன்றக்கூடிய சேரிகளெல்லாம் அகற்றப்படுமென்றும், மாற்றுக் குடியிருப்பு வசதிசெய்து தரப்படமாட்டாது என்றும் சர்க்கார் எச்சரித்துள்ளனர்.

தெரிந்ததுதானே!

'உயர்தரத் தொழில் நுட்பக் கழகத்தை சென்னையில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருந்தது; அதை ஏன் இன்னும் செய்யவில்லை?" என்று மக்கள் சபையில் உறுப்பினரொருவர் கேட்டதற்கு, எங்கு ஏற்படுத்துவது என்று இன்னும் பரிசீலனையில் இருப்பதாகவும், அதற்கு அவசரம் ஒன்றும் இல்லை என்றும் உதவி கல்வி அமைச்சர் தாஸ் பதிலளித்துள்ளார்.

இந்தியாவில் 'கிளைடர்' விமானம் உற்பத்தி

புதுடில்லி, நவ. 26—

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது கிளைடர் விமானம், இன்னும் ஆறு அல்லது ஏழு மாதங்களில் பயணம் செய்வதற்குத் தயாராக இருக்குமாம்.

உங்களுக்குத் தெரியுமா?

எர்ணுகுளம், நவ. 26—

இந்தியாவில், 100-க்கு 97 சதவிகிதம் தென்னிந்தியாவில்தான் தேங்காய் உற்பத்தியாகிறது என்று கூறப்பட்டுள்ளது.

புதிய மாநில அமைப்புக்குப் பிறகு இந்தியக்குடியரசில் கேரளம்தான் தேங்காய் உற்பத்தியில் மற்ற மாநிலங்களைவிடத் தலைசிறந்து விளங்குகிறது. இங்குமட்டும் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதம் உற்பத்தியாகிறது.

சென்னை, மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் 27 சதவிகிதம் தேங்காய் உற்பத்தியாகிறதாம்.

ஆசிரியருக்குக் கடிதம்:

அரியலூர் விபத்திற்கான காரணம் என்ன?

அரசாங்கம் கவனிக்குமா?

அன்புள்ள ஐயா,

நானும் திருச்சியைச் சேர்ந்த இன்னும் சில தோழர்களும் அரியலூர் விபத்து நடந்த இடத்திற்குச் சென்றிருந்தோம். அங்கே நாங்கள் கண்ட காட்சிகள் கோரமானவை; நெஞ்சை உலுக்குபவை!

விபத்திற்கான காரணம் என்ன?

"விபத்திற்கான காரணமாக இரயில்வே அதிகாரிகளின் கவனக்குறைவைத்தான் சுட்டிக்காட்டுகிருர்கள், அப்பகுதி கிராம மக்கள்! வெள்ளம் வரக்கூடிய அளவுக்கு இரண்டு மூன்று நாட்களாகக் கடுமழை பெய்திருக்கிறது; காட்டாற்றுப் பிரவாகத்தை—அதனுல் விளையக்கூடிய தீய நிகழ்ச்சிகளை முன்கூட்டியே எண்ணிப்பார்த்திருந்தால், அங்கே முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்திருக்கலாம்; அதன்மூலம் ஓரளவு, விபத்தின் கொடுமையைச் சமாளித்திருக்கவும் முடியும்—என்றுதான் மக்களிடையே பொதுவான கருத்து நிலவுகிறது.

மாண்டவர் தொகை?

"அரசாங்கக் குறிப்பேடுகளின்படி 145 பேர்தான் இறந்து போயிருக்கக்கூடும் என்று காணப்படுகிறது. ஆனல் கோரச் சாவுக்கு இலக்கான பரிதாபத்திற்குரியவர்களின் எண்ணிக்கை எறத்தாழ நானூறுக்கு மேல் நிச்சயம் இருக்கும். முழு உருவோடு கிடைத்த சவங்களைத் தவிர ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் அங்கங்கள் ஏராளம். மேலும், வெள்ளத்தோடு அடித்துச்செல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகம் இருக்கும். ஆற்றோரமுள்ள கிராமப் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட அநேக சவங்கள் கிடைத்திருக்கின்றன.

நிவாரண வேலை துரிதமாயில்லை!

'விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உறவினர்களை விபத்துக்குப் 'பலி' கொடுத்துத் தவிக்கும் சொந்தக்காரர்களுக்கும் போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படாதிருப்பது கண்டு மனம் வெதும்புகிறது. இரயில்வே நிர்வாகமோ, சர்க்கார் அதிகாரிகளோ இது விஷயத்தில் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அசாதாரண முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டாமா? குடும்பத்தாரைத் தேடி அழுது புலம்பிவரும் உறவினர்களுக்கு சரியான தகவல்தர அங்கு ஏற்பாடுகள் செய்யப்படாதது வேதனையைத் தருகிறது. செய்தி அறிய முடியாது அவர்கள் தவிக்கிருர்கள்—தத்தளிக்கிருர்கள்!

"பாதிக்கப்பட்டு, ஆற்று மண்ணில் புதையுண்டு கிடக்கும் இரயில் பெட்டிகளை அப்புறப்படுத்தி, அடியிலே இன்னும் எத்தனை சவங்கள் இருக்கின்றனவோ என்பதை இன்னும் கண்டறியவில்லை. இந்தத் தாமதத்தை, பாதிக்கப்பட்டு பரிதவிப்பவர்கள் எப்படிச் சகித்துக்கொண்டிருக்க முடியும்? அடியிலும் பிணங்கள் அதிகம் இருக்கத்தான் வேண்டும் என்று அதிகாரிகள் யூகங்கள்தான் தெரிவிக்கின்றனரே தவிர, தேவையான இயந்திரங்களை வரவழைத்து ஆவன செய்யவில்லை. ஆனலும், மந்திரிகளும், உயர்தர அதிகாரிகளும் பார்வையிட்டவண்ணமே இருக்கின்றனர்.

"இந்த நிலையே நீடித்தால், பெட்டிகளை அப்புறப்படுத்தி நிலையைச் சீர்படுத்தவே இன்னும் இரண்டு வார காலத்திற்குமேல் ஆகும் என்றுதான் தோன்றுகிறது.

"விபத்து நிகழ்ந்த தினம் முதல், அரியலூர், டால்மியாபுரம் போன்ற ஊர்களின் தி. மு. கழக கிளையைச் சேர்ந்த தோழர்கள் அங்கு சென்று பொதுமக்களுக்கு வேண்டிய உதவிகள் செய்துவருகின்றனர்.

அன்பன்

ஜி. பராங்குசம்

திருச்சி : 28-11-56

ரஷ்யாவிடம் அதிகப் போர்க் கப்பல்களாம்!

லண்டன், நவ. 25—

இரண்டாவது உலகப் போருக்குப்பின், அதிகப் போர்க் கப்பல்களையும் நாசகாரிகளையும் ரஷ்யா கட்டியுள்ளதாம்!

400 'சப்மரீன்'களுக்குமேல் ரஷ்யா கட்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகத்தில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ரஷ்யா, கடற்படை பலம் பொருந்திய நாடாக இருக்கிறதாம்!

எவ்வளவு தெரியுமா?

இலஞ்சக் குற்றத் தடுப்புச் சட்டம், 1947 மார்ச் 14-ந் தேதியன்று அமுலுக்கு வந்ததிலிருந்து 1956 அக்டோபர் 31-ந் தேதி வரை அச்சட்டத்தின்கீழ் மொத்தம் 976 பேர்மீது வழக்குத் தொடரப்பட்டது என்றும் அவர்களில், 302 பேர் தண்டிக்கப்பட்டனர் என்றும், மாநிலங்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே காலத்தில் இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக மொத்தம் 1,600 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் இவர்களில் 528 பேர் மீது இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 181 பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

33,000 டன் வெங்காயம்

இலங்கைக்கு ஏற்றுமதியாகும்!

கொழும்பு, நவ 26—

அடுத்த ஆறு திங்களில் இந்தியா 33,000 டன் 'வெங்காயம் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் என்று தெரிகிறது.

வடக்கில் மற்ருெரு மாநிலம் வளம் பெறுகிறது!

இரண்டாம் திட்டத்தில் தொழில் துறை அபிவிருத்திகள்

இந்தியாவின் முதல் திட்டம் ஆரம்பத்தில்தான், இராசஸ்தான் மாநிலமே உருவாகியது என்று சொல்லலாம். ஆனல் அதற்குப் பிறகு அந்த மாநிலம் வெகு துரிதமாகப் பொருளாதார, அரசியல் ஆகியவைகளில் அபிவிருத்தி அடைந்து நாட்டின் இதர பகுதிகளுக்குச் சமமான நிலையை அடைந்துவருகிறது. சமீபத்தில், ஆஜ்மீர் அதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

பக்ராவின் அணைத்திட்ட ஏற்பாடுகள் மூலம் இராசஸ்தானில் 5,70,000 ஏகரா நிலம் பாசன வசதி பெறும்; அதாவது அந்த மாநிலத்தில் நீர்ப்பாசன வசதியுள்ள மொத்தப் பிரதேசத்தில் சுமார் ஆறில் ஒரு பங்கு நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்கும். இதர நீர்ப்பாசன, பல காரியத் திட்டங்களில் முக்கியமானவை ரூ. 11,75,00,000 செலவுள்ள சம்பல் திட்டம், ரூ. 3 கோடி செலவுள்ள ஜாவாய்த் திட்டம் ஆகியவையாகும்.

இரண்டாவது திட்டத்தில் செய்யப்படுகிற தொழில்துறை அபிவிருத்தி ஏற்பாடுகளில் 1,50,000 பேருக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலை கிடைக்கும். கைத்தறி தொழிலில்தான் அதிகம் பேர் ஈடுபடுவார்கள். சிறிய வகை வேலைத் தொழில்களும் பலருக்கு வேலையளிக்கும்.

பெரிய தொழில்கள் பிரிவில் மூன்று சிமெண்டுத் தொழிற்சாலைகள், விதோ போன் தொழிற்சாலை, சர்க்கரை ஆலைகள் முதலியவை ஏற்படுத்தப்படும்.

கழகச் செய்திகள்

சென்னை :

15-வது வட்ட தி. மு. க.

11-11-56 காலை 11 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், வருகிற டிசம்பர் அல்லது ஜனவரி திங்களில் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், மற்றும் வட்டக் கழக ஆக்கவேலைகள் குறித்தும் சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

34-வது வட்ட தி. மு. க.

11—11—56 காலை 10 மணிக்கு தோழர் பாலசுந்தரன் இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: இரா. சம்பந்தன்; துணைச்செயலாளர்: சி. ஆர். கோலப்பா; பொருளாளர்: என். கே. நடராசன்; மாவட்டப் பிரதிநிதிகள்: வ. சங்கரநாராயணன், தி. அ. கிள்ளிவளவன். மற்றும் 16 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

35-வது வட்டம் தி. மு. க.

18—11—56 மாலை 7 மணிக்கு, தோழர் கோ. கிருட்டிணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், கிளைக் கழகத்திற்கென புதிய பணிமனை கட்டுவதென்றும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

46-வது வட்ட தி. மு. க.

1—11—56 காலை 10 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் தே. எழுமலை துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

48-வது வட்ட தி. மு. க.

11—11—56 மாலை 7 மணிக்கு தோழர் வைதை சம்பந்தம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் க. முருகேசன், எம். கே குப்புசாமி முறையே செயலாளர், துணைச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம்-செவ்வாய்பேட்டை தி. மு. கழகம்

11—11—56 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு தோழர் ஆர். முருகேசன் கடையில் தோழர் கோ. இறைமணி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 4-11-56ல் நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு - செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கோவில்பட்டி நகர தி. மு. கழகம்

20—11—56 இரவு 10 மணியளவில் தோழர் அ. சு. சி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்ற நகரக் கிளை செயற் குழுக் கூட்டத்தில் வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும், தோழர்கள் மு. அருணசலம், வி. வல்லாபுதம், பொ. சேர்மன் ஆகியோரை செயற்குழு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

குடியேற்றம் நகர தி.மு.க.

18—11—56 இரவு 9 மணிக்கு தோழர் கு. சி. பொன்னுசாமி இல்லத்தில் நடைபெற்ற நகரச் செயற் குழுக் கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டுவது குறித்தும், மற்றும் சில முக்கிய முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

புறக்கோட்டை (இலங்கை) தி. மு. கழக துவக்க விழா

18—11—56 காலை 9 மணிக்கு, கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில், மேற்படி கிளைக் கழகத் துவக்க விழா, தோழர் எஸ். பி. அருணாலம் தலைமையில் நடைபெற்றது. தோழர் சுந்தரராசன் கிளைக் கழகத்தைத் துவக்கி வைத்தும், தோழர் ஜலால் கழகக் கொடியை ஏற்றிவைத்தும், மற்றும் தோழர்கள் டேலர், மன்னர் மன்னன், தருமதாசன், சுவாமி தாசன், ஆனந்தன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும் பேசினர்.

குமராட்சியில் தி.மு. கழகத் துவக்கம்

14—11—56 மாலை சிதம்பரம் வட்டம் குமராட்சியில் தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்றது. தோழர் இரெத்தின-பாலகுருசாமி சொற்பொழிவாற்றினர். பின்னர் கிளைக் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: சா. கலியமூர்த்தி; துணைச்செயலாளர்: எல். இராமநாதன்; பொருளாளர்: சி. சின்னசாமி; மாவட்டப் பிரதிநிதி: சு. சரவணமுத்து.

தொட்டக்கொம்பை தி. மு. கழக ஆண்டு விழா

18-11-56 மாலை தொட்டக் கொம்பை (நீலகிரி) தி. மு. கழக 2-வது ஆண்டு விழா பொதுக்கூட்டம் குன்னூர் மார்க்கெட் மைதானத்தில் தோழர் கா. பேப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, தருமராசன் பேசினர்.

மேலப்பாளையம் தி. மு. க.

13—11—56 மாலை தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: தெ. ந ஆறுமுகம்; துணைச் செயலாளர்: ம. உதுமான்; பொருளாளர்: டி. எ. எ. சாகுல் அமீது; மாவட்டப் பிரதிநிதிகள்: எஸ். எம். புகாரி; ஆர். எஸ். மாவுனு. 16 பேரடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மின்னப்பாளையம் தி.மு.க.

20—11—56 இரவு 7 மணிக்கு, தோழர் கே. எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், திரு. சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எட்டயபுரம் தி. மு. கழகம்

18—11—56 இரவு 8 மணிக்கு, தோழர் தி. இராமசாமி தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் கிளைக் கழக வரவு - செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

மணக்கால் தி. மு. கழகம்

7-10-56 இரவு 9 மணிக்கு, தோழர் ம. சி. சோமசுந்தரம் இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ம. சி. சோமசுந்தரம்; துணைச் செயலாளர்: சி. பரமசிவம்; பொருளாளர்: தஸ்தகீர்; விளம்பர உறுப்பினர்: இராமநாதன்; மாவட்டப் பிரதிநிதி: மு. பசுபதி. முன்னாள் செயலாளர் எஸ். பாலமுத்து விலகல் கடிதம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தேவிகுளம், பீர்மேடு தமிழ்ப் பகுதிகளைப்பெற தொடர்ந்து முயற்சிக்கவேண்டும்

நாகர்கோயில் தி. மு. கழகக் கூட்டத்தில் தீர்மானம்

"தேவிகுளம், பீர்மேடு, கொச்சின்-சித்தூர், செய்யாற்றின் கரை, மற்றும் செங்கோட்டை முதலிய தாலுகாக்களின் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்கவேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைக்கும் விருப்பத்திற்கும் மாறாக, அவற்றை கேரளத்திற்கு விட்டுக் கொடுத்த சென்னை சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், அந்த தமிழ்ப் பகுதிகளைத் திரும்பப்பெற உடனடியான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று கோருகிறோம்"

என்பதாக, நாகர்கோவில் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த 16-11-56 அன்று மாலை 6 மணியளவில் நகரசபைத் திடலில், நாகர்கோவில் நகர தி. மு. கழக ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் ஏ. இராமசாமி கேட்டுக் கொண்டதற்கிணங்க, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக செயலாளர் எம். குமாரசாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

தோழர் சி. பி. சிற்றரசு உள்ளிட்ட பலர் அன்றையக் கூட்டத்தில் பேசினார்கள்.

கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

பத்மனாபபுரம் அரண்மனையையும் கேரள சர்க்காரிடமிருந்து திரும்பப்பெறக் கோரியும் ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளது.

(ச. தி.)

பேராபட்டியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

18-11-56 மாலை பேராபட்டியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் சி. பெ. குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வே. கருணாகரன், என். சர்க்கரையப்பன், பி. சுப்பையா, வே. வேலாயுதம், என். இராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வடக்கன்குளத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

13-11-56 இரவு 7 மணிக்கு சமதர்ம சதுக்கத்தில் தோழர் சு. வன்னியபெருமாள் தலைமையில் கிளைக் கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். வி. எம். அப்துல்காதர், வடலை வாணன், தி. சி. செல்லையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புக்குளத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

20—11—56 மாலை 7 மணிக்கு தோழர் பு. கி. நடராசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பண்ணன், ப. நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பர்மா தி. மு. கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம்

14-10-56 காலை 10 மணிக்கு; பர்மா தி. மு. கழகப் பணிமனையில் தோழர் வி. சுப்பிரமணி தலைமையில் பர்மா தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர், கழக வரவு-செலவுகள் குறித்தும், ஐந்து உறுப்பினர் கூட்டங்களுக்குத் தொடர்ந்து வராமல் இருந்த தோழர் பி. நெடுஞ்சேரன் அவர்களை நீக்கி, அவருக்குப் பதில் தோழர் எஸ் எம். வேல்பாண்டியனைச் சேர்த்துக்கொண்டும், புதிய உறுப்பினர்களையும் உறுப்பினர் நுழைவு விண்ணப்பத் தாள்களையும் அங்கீகரித்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருபெரும்புதூர் வட்டக் குழு அமைப்பு

18—11—56 பகல் $1\frac{1}{2}$ மணிக்கு தோழர் டி. கே. போரூரான் இல்லத்தில், தோழர் தி. ந சம்பந்தம் தலைமையில் திருபெரும்புதூர் வட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றபோது வட்டக் குழு அமைக்கப்பட்டது:—செயலாளர்: டி. கே சிவகுமாரன் (குன்றத்தூர்); துணைச்செயலாளர்: பி சின்னசாமி (பூவிருந்தவல்லி); பொருளாளர்: குபேரன் (ஒரகடம்); மாவட்டப் பிரதிநிதி: கா. மூர்த்தி (நசரத்பேட்டை).

காஞ்சிபுரம் நகர தி. மு. க.

18—11—56 காலை 10 மணிக்கு தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற நகரக் கிளை செயற்குழுக் கூட்டத்தில் வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொண்டும், தோழர் சி இ சரவணபெருமாள் விலகலை ஏற்றுக்கொண்டும், தேர்தல் நிதிக்காக செயற்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் ரூ 10 தருவதென்றும், மேற்கொண்டு தேர்தல் நிதி வசூலிக்க நாடகம் நடத்துவதெனவும், அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் தோழர்கள் இரா. வெங்கடேசன், சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி ஆகிய மூவருக்கு அதிகாரம் வழங்கியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி கிராமத்தில் வெள்ளச் சேதம்!

கழகத் தோழர்களால் கால் நடைகள் காப்பாற்றப்பட்டன

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில், கடந்த ஒரு வாரமாகப் பெய்த பெருமழையின் காரணமாக மருதை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, இலப்பக்குடி எனும் கிராமத்தில் ஆற்றுநீர் கரைபுரண்டு புகுந்து பல வீடுகளை நாசமாக்கியதுடன், ஏராளமான கால்நடைகளும் பலி கொள்ளப்பட்டன என்று தகவல் கிடைத்திருக்கிறது.

ஆற்றோரமாயிருந்த ஒரு ஆட்டுக் கிடையில் இருந்த சுமார் 350 ஆடுகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லபபட்டுவிட்டன.

மற்றொரு கிடையில் இருந்த சுமார் 200 ஆடுகள், ம ரெங்கராசு, சுப்பையா, வெள்ளைமுத்து முதலிய நமது தி மு கழகத் தோழர்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

இடையளவு தண்ணீரில் இரவு முழுவதும் வெள்ளம் வடியும்வரை நின்று அந்தத் தாக்கால் நடைகளைக் காப்பாற்றினர், தோழர்கள்!

ஏராளமான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த மிளகாய், நெல் சாகுபடி வெள்ளத்தால் சேதமுற்றிருக்கின்றன. இந்தப் பயிர்ச் சேதம் மட்டும் ரூ 10 ஆயிரம் மதிப்புடையது என்று கூறப்படுகிறது.

(ந. தி.)

****-**************-****

தலைமைக் கழக அறிக்கை—10/56

உறுப்பினர் புதுப்பித்தல்

திராவிட முன்னேற்றக் கழகத்தில், சென்ற தடவை உறுப்பினராயிருந்து, இரண்டாவது முறையாக இப்போது புதுப்பித்துக்கொள்ளாதவர்கள், 1956 டிசம்பர் திங்கள் 31-ம் நாளுக்குள் உறுப்பினராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளாவிடில், தாமாகவே கழகப் பொறுப்புகளிலிருந்தும் உறுப்பினர் உரிமையிலிருந்தும் நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரா. நெடுஞ்செழியன்,

'அறிவகம்' சென்னை-13 24-11-'56. } பொதுச் செயலாளர், தி. மு.கழகம்

****-**************-****

இராமநாதபுரம் மாவட்டத்தில்

மீண்டும் வெள்ளம்

ஒருகிராமத்தில் 250 விடுகள் சேதமடைந்தன

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத்தூர் வட்டம் காளாப்பூர் கிராமத்தில், கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பெருமழையின் காரணமாக கடந்த 24-11-56ந் தேதியன்று பாலாற்றில் நீர் பெருகி, கிராமத்திற்குள் 10 அடிவரை பாய்ந்து சுமார் 250 வீடுகளைச் சேதப்படுத்திவிட்டது.

உணவுப் பொருள்களும், கால்நடைகளும்கூட — 50 ஆயிரம் ரூபாய் பெறுமானமானவை-வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது என்று தெரியவருகிறது.

[illegible] மாவட்ட அதிகாரிகளுக்கு தந்தி மூலம் தி. மு கழகத் தோழர்கள் தகவல் அறிவித்தனர்.

அதிகாரிகள் இரவு சுமார் 11-மணியளவில் கிராமத்தை வந்து பார்வையிட்டுச் சென்றதுடன், மறுநாள் 5 மூட்டை அரிசி அனுப்பி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியிருக்கின்றனர்.

சேதமுற்ற வீடுகளை எல்லாம், கழக தோழர்கள், அதிகாரிகளை அழைத்துச் சென்று காண்பித்து வருகின்றனர்.

மேலும், இப்பகுதிகளில் பெருமழை காரணமாகக் கண்மாய்கள் உடைப்பு கண்டு, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, நெற்பயிர்களைப் பாழடித்து விட்டன. (ந. - தி.)

சித்த மருத்துவம் மறையக் காரணம்?

ஜி. டி. நாயுடு விளக்கம்

கோவை, நவ. 27—

சென்னை மாநில சித்த வைத்தியர்கள் மாநாடு 24-ந் தேதியன்று, 'கோபால் பாக்'கில், சென்னை மாநில சுகாதார இலாகா முன்னாள் டைரக்டர் பெருமாள் முதலியார் தலைமையில் நடைபெற்றது.

துவக்கத்தில், திரு. குமாரசாமி பிள்ளை, மாநாட்டின் நோக்கத்தைக் குறித்து விளக்கினர்.

வரவேற்புக் கமிட்டி தலைவர் திரு. ஜி டி. நாயுடு எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், சித்த வைத்திய மாநாட்டுக்கு அதிக வைத்தியர்கள் வந்திருப்பதைப் பாராட்டினர்; அவர்களின் ஒற்றுமை வளரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

"ஒருவருக்குத் தெரிந்த நல்ல மருத்துவ முறையை மற்றவர்களுக்கும் சொல்லித் தர வேண்டும்; அது நாட்டு மக்களுக்குப் பயன்படச் செய்யவேண்டும்; அப்படிச்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

செய்யாததே சித்த வைத்தியம் மறைந்து வருவதற்கு முக்கிய காரணம்" என்று குறிப்பிட்டார்.

"சித்த வைத்தியத்திற்குப் போதிய மதிப்பு தருவதற்கு மத்திய அரசாங்கம் அளிக்க முன்வரவில்லை; சித்த வைத்தியர்களுக்கு பல நியாயமான குறைகள் உள்ளன. அவர்கள் ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்தால்தான் ஏதாவது நல்லது நடக்கும்" என்றும் அவர் கூறினர்.

செஞ்சீனாவின் எதிர்காலம் பற்றி சூ-என்-லாய்

"எகிப்தில், பிரிட்டிஷ்-பிரெஞ்சு நாடுகள் நடத்தியிருக்கும் ஆக்கிரமிப்பு, மேற்கத்திய நாடுகளிடையிலவும் நீதிநெறியின் பஞ்சுனியத்தை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது" என்று சீனப் பிரதமர் சூ-என்-லாய் கம்போடிய சட்டசபையில் குறிப்பிட்டுள்ளார்.

சீனு அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய நாடு என்ற நிலையிலிருந்து தொழில் முன்னேற்ற நாடாக மாறுவதற்கு முயன்று வருவதாகவும், அதற்கு உலக சமாதானமும், மற்ற நாடுகளின் நல்லெண்ணமும் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் போராட்டத்திற்கு சர்க்கார் பணிவு

திருவனந்தபுரத்தில் கிளை உயர் நீதிமன்றம் அமையும்!

திருவனந்தபுரம், நவ 27—

திருவனந்தபுரம் வழக்கறிஞர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டு கிளர்ச்சி செய்து வருவதின் எதிரொலியாக, கேரள கவர்னர் டாக்டர் பி. ராமகிருஷ்ணராவ், அறிக்கை ஒன்றில், 'திருவனந்தபுரத்தில் கேரள உயர் நீதிமன்றத்தின் கிளை ஒன்று தற்காலிகமாக நிறுவுவது பற்றி சர்க்காரும், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும் பரிசீலனை செய்யத் தயாராயிருக்கின்றனர்; இதன் மூலம், சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படக்கூடிய உடனடி சங்கடங்களைத் தவிர்க்கமுடியும் என்று கூறியிருக்கிறார்.

பயிரிடும்சாகுபடியினர் பாதுகாப்புச் சட்டம்

'ரிட்' மனு மீது உயர் நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பு

சென்னை, நவ. 26—

"விவசாயம் நம் நாட்டுக்கு முதுகெலும்பு போன்ற நிலையில் இன்றும் இருக்கிறது. விவசாயத் துறையில் ஈடுபட்டவர்களிடையே திருப்தியையும், மன நிம்மதியையும் ஏற்படுத்தச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். அதற்காக அரசாங்கம் ஏற்படுத்தும் கொள்கைகளின் தன்மைபற்றி மதிப்பிடுவதோ, அலசிப்பார்ப்பதோ நீதிமன்றத்தின் பொறுப்பல்ல; சட்டசபைக்குத்தான் அந்த உரிமை பிரத்யேகமாக உண்டு" என்று, சென்னை உயர் நீதிமன்றத்தில், சென்னை பயிரிடும் சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டத்தை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட ஒரு 'ரிட்' மனுவைத் தள்ளுபடி செய்து அளித்த தீர்ப்பில் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அண்ணு வேண்டுகோள்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"15 வயது வாலிபன், எங்கோ ஓரிடத்தில் வேலைசெய்து மாதம் ரூ. 40 சம்பாதித்தால், அவனது வயோதிகத் தாய், மாதம் முப்பதோ முப்பத்தைந்தோ செலவிட்டுவிட்டு, ஐந்தோ பத்தோ, இரண்டோ மூன்றோ மாதந்தோறும் மிச்சப்படுத்தி வருவாள்.

"'எதற்காக இப்படி மிச்சப்படுத்துகிறாய்?' என்று அக்கம் பக்கத்தார் கேட்டால், 'இப்போது பதினைந்து வயதினனாய் இருக்கும் எனது மகன், நாளை சற்றுப் பெரியவனானதும், அவனுக்குத் திருமணம் செய்து நான் பார்க்கவேண்டாமா? அதற்காகத்தான்,' என்று கூறுவாள்.

"பணக்கார மாமன் கிடைத்த பையன் திருமணம் ஆடம்பரமாக நடைபெற்றாலும், தாய் தனது பாசத்தைக் காட்டிக் கொள்ள இந்த சேமிப்புத் தொகைதான் பயன்படும்.

"அதைப்போலத்தான், நமது தோழர்களும், நமக்கு ஆதரவு நல்கிவரும் மக்களும் இந்த தி. மு. கழக தேர்தல் நிதிக்கு சிறுகச் சிறுகச் சேர்த்து நிதி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்; கழகத்திடம் மக்களும் தோழர்களும் கொண்டுள்ள பாசத்தைக் காட்டிக்கொள்ள நல்ல வாய்ப்பு இதுதான்"—என்று, அண்ணு அவர்கள் கடந்த 24—11—56 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

அவரது சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்று வெளிவந்துள்ளது. இதர பகுதிகள் இங்கு தரப்படுகின்றன :—

நேருவைத்தான் எதிர்பார்க்கிறார்கள் !

"இன்று மக்கள், காங்கிரசார் பக்கம் இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிகிறது. மக்களை எப்போதாவது பார்க்க வேண்டும் என்று இங்குள்ள காங்கிரசார் விரும்பினால், அவர்கள் நேருவைத்தான் எதிர்பார்க்கிறார்கள்; மக்களைக் கூட்டுவதற்கு நேருவைத்தான் வரவழைக்க வேண்டியுள்ளது.

இருந்தாலும் என்ன துணிவு ?

"இந்த நிலை இருந்தாலும், மக்கள் அவர்கள் பக்கம் இல்லை என்றாலும், காங்கிரசார், 'தேர்தலில் வெற்றி பெறுவோம்' என்று எந்தத் துணிவினால் கூறுகிறார்கள் ?

எல்லாம் பணம்தான் !

"'நம்மிடம் ஏராளமான ஆலை முதலாளிகள், பெரும் பணக்காரர்கள், மிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள் — அவர்களிடம் பெரும் பணம்கொண்ட இரும்புப் பெட்டி இருக்கிறது' என்ற துணிவினால்தானே !

ஆனால் நாம்......

'காங்கிரசார் அந்தத் துணிவுடன் இருக்கிறார்கள் ; ஆனால், நம்மிடம் பணம் இல்லை; நாம் கொண்டிருக்கிற துணிவு எல்லாம், மக்களின் ஆதரவுதான் !

வரவேற்காதவர் இல்லை

"நாம் தேர்தலில் போட்டியிடுவதை வரவேற்காத ஊர் இல்லை; 150 இடங்களில் காங்கிரசை எதிர்க்கிறோம் என்பது கேட்டு மகிழ்ச்சியடையாத உள்ளம் இல்லை; ஒத்துழைப்பு உண்டு என்று உறுதி கூறாத கழகத் தோழர் இல்லை ; தேர்தலுக்கு ஓரளவு பணம் தேவை என்பதை உணரும் பொறுப்புள்ளவர்கள் இல்லாமல் இல்லை.

"இந்த நிலையில், நம்மில் ஒவ்வொருவரும், தேர்தல் நிதி திரட்ட, அரும்பாடுபட்டாக வேண்டும்.

"நாம் நம்பியிருப்பது மக்களைத்தான்; மக்கள், நமக்கு கடந்த ஏழாண்டுகளில் பேராதரவு தந்து வந்திருக்கின்றனர். நாம் கூட்டம் நடத்தினால் பல்லாயிரக்கணக்கில் கூடுகிறார்கள் மக்கள் ; அவர்கள் நமக்கு இப்படித் தந்துவரும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான், கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது—150 இடங்களில் போட்டியிடுகிறது.

'மக்களை நாம் பரிபூரணமாக நம்புகிறோம்; அவர்களும் நம்மீது நம்பிக்கைவைத்து வந்திருக்கிறார்கள். தொடர்ந்து அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமானவகையில் நாம் நடந்துகொள்வோம் என்று அவர்களுக்கு உறுதியளிக்கிறோம்.

"மக்களை நாம் பரிபூரணமாக நம்பியிருக்கிறோம். எனவே, தேர்தலில் நாம் குறிப்பிடத்தகுந்த வெற்றி பெறுவிட்டால், 'மக்கள் நம்மை நம்ப வைத்துக் கெடுத்துவிட்டார்கள்,' என்று பொருள்படும். நாம், பின்னர் மக்களின் ஆதரவைக் கணக்கிடும் முறையை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். 'மக்களைப் புரிந்துகொள்ள நாங்கள் தவறிவிட்டோம்,' என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும்."

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

வரும் டிசம்பர் முதல் தேதியன்று உத்தேசிக்கப்பட்டிருந்த துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டுவிட்டதாகவும், தாம் தொழிலாளர் தலைவர்களுடன் நடத்திய நீண்ட பேச்சு வார்த்தைகள் பலன் தந்திருப்பதாகவும் இரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

தொழிலாளருக்கு நஷ்ட ஈடு இல்லை !

சட்டப் பிரச்சினையில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு

புதுடில்லி, நவ. 27—

"நியாயமான காரணங்களுக்காக ஒரு தொழிற்சாலை மூடப்பட்டு அல்லது வேறொருவருக்கு விற்கப்பட்டு அதற்கு ஒரு புதிய சொந்தக்காரர் வருகிறார்; அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 'நோட்டீஸ்' தரப்பட்டு அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர் ; அந்த நிலைமையில் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு தரவேண்டியதில்லை" என்று இந்திய உயர் நீதிமன்றம், ஆட்குறைப்பு நஷ்டஈடு சட்டப் பிரச்சினை மீது தீர்ப்பளிக்கையில் கூறியுள்ளது.

1—1—57 ஜனவரித் திங்கள் முதல் நாள் !

தென்னகமெங்கும் பொன்னுன கருத்துக் கதிர்களைவிசிப் புத்தொளி பரப்பும் உன்னத ஏடு உலவிடத் துவங்கும் நன்னாள்!

'உதயசூரியன்'

தி. மு. க. திங்கள் ஏடு விலை நான்கு அணு

ஆசிரியர் : இ. ல. ம. சௌந்திரபாண்டியன்

★

இதழ் ஒன்றுக்கு நான்கு அணு வீதம் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை

விபரங்களுக்கு

பொறுப்பாளர் : 'உதயசூரியன்'

கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்

5,60,000 பேருக்கு வேலையிருக்காதாம் !

புதுடில்லி. நவ. 26—

இந்திய அரசாங்கம் டில்லி, மேற்கு வங்கம், திரு-கொச்சி ஆகிய மூன்று இடங்களில் பயிற்சி நிலையங்களை நிறுவி, படித்தும் வேலையற்றுக் கிடப்போருக்கு வேலை கொடுத்து உடல் உழைப்பைப் பெற முடிவு செய்துள்ளது.

பத்தாவது வகுப்புவரை படித்து வேலையற்று கிடப்போருக்கு, ஆறு மாத காலம் பயிற்சியளிப்பதற்கான பல திட்டங்கள் உள்ளனவாம்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,35,000 பேர்களுக்கு வேலை தேடித் தர ரூ. 130 கோடி செலவிட அபிவிருத்திக் குழு சிபாரிசு செய்துள்ளதை நடைமுறைக்குக் கொண்டுவருவதே இந்தத் திட்டமாகும்.

1960—61-ம் ஆண்டு இறுதியில் —அதாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடியும் போது நாட்டில் 5 60,000 பேர் வேலையற்றுக் கிடப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னைக்குத் தலாய் லாமா வருகை தருகிறார்

சென்னை, நவ 27—

தலாய்லாமா டிச. 11-ந் தேதி அன்று விசேட இரயில் மூலம் சென்னைக்கு வருகிறார் ; அவர் இங்கு 4 நாட்கள் தங்கியிருப்பார். புத்த நிலையங்கள் அவருக்குப் பாராட்டும், வரவேற்பும் அளிக்கும்.

கழகக் கூட்டங்கள்

★

உலகப்பம்பாளையம் :
பிள்ளையார் கோவில் திடலில்
30-11-56 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
பேசுபவர் :
ஈ. வெ. கி. சம்பத்

★

விராலிமலை :
30—11—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : சி. சுப்பையா
பேசுவோர் :
அன்பில்-தர்மலிங்கம்
அருண்மொழி, ஏ. கே. வில்வம்
எம். நடராசன், காசிநாதன்

★

வேங்கவாடி :
30—11—56 மாலை 6 மணிக்கு
தி மு. கழகத் திறப்பு விழா
பேசுவோர் :
ஏ. ஆனைமுத்து
பொ. இராமகிருட்டிணன்

அருணசலம் நினைவு மன்றம்

செங்கற்பட்டு மாவட்டம், எலப்பாக்கம் அருணசலம் நினைவு மன்ற முதல் ஆண்டு விழாவும் தேர்தல் நிதியளிப்பும், 30-11-56 அன்று தோழர் வி. டி அண்ணமலை தலைமையில் நடைபெறும். தோழர்கள் முனுவை-ஆர் எஸ். பாண்டியன், சி. வி. எம். அண்ணமலை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

****

தேர்தல் நிதிக் கலை நிகழ்ச்சி

சென்னையில் டிசம்பர் 9-ல் !

எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

★

தோழர்கள்

கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி

ஆகியோர் அளிக்கும்

கலை விருந்து

ஏற்பாடாகி வருகிறது !

★

கலைவிருந்து பெறுவீர் ! காணிக்கை தருவீர் !!

டிசம்பர் 9 ! டிசம்பர் 9 !

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

வள்ளுவர், வள்ளலார் பரிசு

சென்னை மாணவர் மன்ற இவ்வாண்டின் (வெள்ளி விழா) வள்ளுவர், வள்ளலார் பரிசுப் போட்டிகள், சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை, அம்மன் கோவில் தெரு, டாக்டர் குருசாமி முதலியார் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் 2—12—56 பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மாணவர் — மாணவியர்கள், விவரங்களுக்கு அடியிற்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் :- 17, இரத்தின முதலி தெரு, கொண்டித்தோப்பு, சென்னை—1.

சொற்பயிற்சிக் கூட்டம்.

29-11-56 மாலை 6 மணிக்கு, சென்னை 16-வது வட்ட திருவள்ளுவர் முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில், தோழர் இராமலிங்கம் தலைமையில் 'ஆத்திகம்—நாத்திகம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்; தோழர் மோகன் பரிசு வழங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம், ஏ